Tamilmanam International Research Journal of Tamil Studies
Volume 1, Issue 2, November 2024

# பதிற்றுப்பத்து மற்றும் புறநானூற்றில் குறிஞ்சிப்பாட்டில் கபிலர் மொழிந்த 99 மலர்கள்

முனைவர் கி.சங்கர நாராயணன்

உதவிப் பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர் (பொ.) தமிழ் மேம்பாட்டுச் சங்கப்பலகை, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை http://orcid.org/0000-0002-6260-8164

சங்க இலக்கியமான பாட்டும் தொகையும் தமிழிரின் அகம் மற்றும் புறவாழ்வியலை வெளிப்படுத்தும் பேரிலக்கியமாகும். எட்டுத்தொகையானது ஐந்து அக இலக்கியம், இரண்டு புற இலக்கியம் ஒரு அகப்புற இலக்கியமாகவும் பாகுபடுத்தப்பட்டுள்ளது. பத்துப்பாட்டு இலக்கியங்களில் ஒன்றான குறிஞ்சிப்பாட்டினை எழுதியவர் கபிலர். குறிஞ்சிப்பாட்டில் கபிலர் 99 மலர்களைப் பட்டியலிடுகிறார். செவ்விலக்கியங்கள் என்றழைக்கப்படும் சங்கக்கவிகளில் இம்மலர்கள் குறித்த பதிவுகள் நிரம்பக் காணக்கிடக்கின்றன. இந்த ஆய்வானது குறிஞ்சிப்பாட்டில் இடம்பெறும் 99 மலர்களின் வருகை இடங்களை எட்டுத்தொகையின் புற இலக்கியமான பதிற்றுப்பத்து மற்றும் புறநானூற்றில் இனம் கண்டு தொகுத்துரைப்பதாக அமைகின்றது.

**கூவிளம்**

கூவிளம் என்ற மலரை வில்வம், வில்வை, குசாபி என்றும் அழைப்பதுண்டு. பெரும் வள்ளல்களில் ஒருவரான எழினி குதிரை மலைக்குத் தலைவன் ஆவான். இவன் தன் அடையாள மலராகக் கூவிளம் மலரைச் சூடியதாகப் புறநானூறு எடுத்துரைக்கின்றது.

**கூவிளம்** கண்ணி கொடும் பூண் எழினியும் (புறம்.158:9)

**கள்ளி**

இரவு நேரங்களில் மட்டும் மலரும் தன்மை கொண்டது இம்மலர். இம்மலரின் வாழ்நாள் ஒரு நாள் மட்டுமே. இது ஓர் ஆண்டில் ஒரே தடவை மட்டும் இரவில் பூத்து ஒரே நாளில் வாடிப்போகும் தன்மை உடையது. இம்மலரை இரவின் இளவரசன், இரவின் இளவரசி என்றும் அழைப்பதுண்டு.

கவை முள் **கள்ளி** பொரி அரை (புறம்.322:2)

இரண்டாய்ப் பிளந்த முட்களையுடைய கள்ளி மரத்தின் பொரிந்த அடிப்பகுதி எனப் புறநானூறு விளக்கம் தருகிறது.

**பூளை**

காற்றில் ஒரு மாத காலம் உதிராமல் இருப்பது இம்மலர். மதில் போரில் ஈடுபடுவோர் உழிஞைப் பூவோடு பூளைப் பூவையும் சேர்த்துக் கட்டி அணிந்துகொள்வது வழக்கமாகும். மடலூரும் தலைவன் அணிந்துகொள்ளும் மாலையில் பூளை, ஆவிரை, எருக்கு ஆகிய பூக்கள் தொடுக்கப்பட்டிருக்கும். கண்ணகி மதுரையை எரியூட்டியபோது நான்கு வருணப் பூதங்களும் வெளியேறின. அவற்றுள் ஒன்றாகிய வேளாண் பூதம் அணிந்திருந்த பூக்களில் ஒன்று பூளை என்பதும் குறிப்பிடத்தக்கது. பூளை வறண்ட வெட்டவெளியில் வளரும் தன்மையுடையது. பொதுவாக நாம் உறங்கி எழுந்த பின்னர் நம் இரண்டு கண்ணில் ஓரத்தில் சிறு வெள்ளை நிறத் திரள் படர்ந்திருக்கும். இதனைப் பூளை என்பர். ஏனெனில் இந்தப் பூளைப் பூவினைப் போன்று இருப்பதால் இப்பெயரால் அழைக்கின்றனர்.

**பூளை** நீடிய வெருவரு பறந்தலை (புறம்.23:20)

**மருதம்**

திருப்பரங்குன்றத்து இறைவனான முருகப்பெருமானை வணங்க வந்த சூரர மகளிர் தமது தலையில் செண்பகப் மலரையும், மார்பில் மருத மர மலர்களை இலைகளோடு சேர்த்துக் கட்டிய மாலையையும் அணிந்திருந்தார் என்று இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. சங்க இலக்கியத்தில் மருதம் என்ற சொல் நிலமாகவும் பண்ணாகவும் மலராகவும் ஒழுக்கமாகவும் கையாளப்படுகின்றது. இம்மருத மலரின் நுனியில் முடிபோன்ற அமைப்பு இருக்கும். புறநானூற்றில் மருதம் என்ற சொல்லின் வருகையினைப் பின்வரும் வரிகள் உறுதிசெய்கின்றன.

துறை நணி **மருதத்து** இறுக்கும் ஊரொடு (புறம்.344:3)

**அதிரல்**

அதிரல் வேனில் காலத்தில் பூக்கும். இம்மலர் இரவில் அல்லது வைகறைப் பொழுதில் மலரும். இதனைப் புனலிக்கொடி என்று நச்சினார்க்கினியரும், காட்டுமல்லிகை என்று அரும்பதவுரையாசிரியரும், மோசிமல்லிகை, என்று அடியார்க்கு நல்லாரும் குறிக்கின்றனர். அதிரல் மலர் பெரும்பொழுதுக் காலமான இளவேனில் காலத்திலே மலரும் என்று புறநானூறு விளக்கம் தருகின்றது.

குயில் வாய் அன்ன கூர் முகை **அதிரல்** (புறம்.269:1)

**கரந்தை**

செந்நீலம், சிவப்பு, நீலம், இளஞ் சிவப்பான சிறு முட்டை வடிவான மஞ்சரித் தொகுப்பான மலர்களைச் செடியின் முடியில் கொண்ட சிறு செடியாகும். இம்மலரைச் சிவகரந்தை, விஷ்ணு கரந்தை, கொட்டைக்கரந்தை என்றும் அழைப்பதுண்டு. இளமையான இளைய பசுவின் மடிக்காம்பினைப் போன்ற

மலரினை உடையது கரந்தை எனப் புறநானூறு கூறுகின்றது. மேலும், காய் காய்த்த கரந்தையின் கரிய கொடி விளைகின்ற வயல் எனப் பதிற்றுப்பத்தும் கூறுகின்றது.

நாகு முலை அன்ன நறும் பூ **கரந்தை** (புறம்.261:13)

காய்த்த **கரந்தை** மா கொடி விளை வயல் (பதி.40:5)

**அடும்பு**

கடற்கரை மணற்பரப்பில் வளரும் தன்மையுடைய இம்மலர் செந்நீல நிறத்தில் காணப்படும். இம்மலரைச் சிவபெருமான் தன் தலையில் அணிந்திருப்பதாகத் திருநாவுக்கரசர் தன்னுடைய தேவாரத்தில் குறிப்பிடுவார் (அடும்புங் கொன்றையும் வன்னியும் மத்தமும் துடும்பல் செய்சடைத் தூமணிச் சோதியான்).

அடும்பு அமல் அடைகரை அலவன் ஆடிய (பதி.51:7)

**வாகை**

பஞ்சு போன்ற முடியினைக் கொண்ட வாகைப்பூ எனவும் பொன்னால் செய்த அழகிய தலைமாலை அணிந்த, பொன்னாலான தேரினைக் கொண்ட நன்னனின் ஒளிவிடும் பூக்களையுடைய வாகையாகிய காவல்மரத்தை அடியோடு வெட்டிச் சாய்த்தது என்றும் பதிற்றுப்பத்து வாகையை தன்னுடைய இலக்கியத்தில் அறிமுகம் செய்கிறது

துய் வீ **வாகை** (பதி.43:23)

பொன் அம் கண்ணி பொலம் தேர் நன்னன்

சுடர் வீ **வாகை** கடி முதல் தடிந்த (பதி.40:14-15)

**வள்ளி**

சங்க இலக்கியத்தில் வள்ளி என்பது முருகனின் மனைவி, கூத்துவகை, கிழங்கு, கொடி என்ற பொருளில் எடுத்தாளப்படுகின்றது. . உழவரால் உழுது விளைக்கப்படாதன நான்கு விளையுளை உடைத்து, ஒன்று, சிறிய இலையையுடைய மூங்கிலினது நெல் விளையும், இரண்டு, இனிய சுளையையுடைய பலாவினது பழம் ஊழ்க்கும், மூன்று, கொழுவிய கொடியையுடைய வள்ளிக்கிழங்கு தாழ இருக்கும் நான்கு, அழகிய நிறத்தையுடைய ஓரி பாய்தலால், அதன் மேற்பவர் அழிந்து கனத்த நெடிய மலை தேனைப்பொழியும் எனப் புறநானூறு விளக்குகிறது.

உழவர் உழாதன நான்கு பயன் உடைத்தே

ஒன்றே சிறியிலை வெதிரின் நெல் விளையும்மே

இரண்டே தீம் சுளை பலவின் பழம் ஊழ்க்கும்மே

மூன்றே கொழும் கொடி **வள்ளி** கிழங்கு வீழ்க்கும்மே

நான்கே அணி நிற ஓரி பாய்தலின் மீது அழிந்து

திணி நெடும் குன்றம் தேன் சொரியும்மே (புறம்.109:3-8)

**நெய்தல்**

கடற்கரை நிலங்களில் இந்நெய்தல் மலர் அதிகமாக மலர்ந்திருக்கும். இதன் சிறப்பினாலே அந்தநிலத்திற்கு நெய்தல் நிலம் எனப் பெயர் வரப்பெற்றது. நெய்தல் என்ற சொல் சங்க இலக்கியத்தில் நிலமாகவும் ஒழுக்கமாகவும் மலராகவும் பறையாகவும் பயன்படுத்தப்படுகின்றது. நெய்தல் மலர் கரும்புப்பாத்திகளில் கலித்து வளரும் எனப் பதிற்றுப்பத்து கூறுகின்றது.

கரும்பின் பாத்தி பூத்த **நெய்தல்** (பதி.13:3)

**செங்குரலி**

சிறுசெங்குரலி என்பதற்குக் கருந்தமாக் கொடிப்பூ என்று உரை கண்டார் நச்சினார்க்கினியர். தாமக்கொடி என்றால் நீர்க்கொடி. எனவே கருமையான நீர்க்கொடியில் பூக்கும் பூ சிறிய அளவில் செம்மை நிறத்தில் பூக்கும் கொடிப்பூ என்று மட்டும் அறிய முடிகின்றது. இம்மலரைப் பற்றிக் கொங்கு வேளிரும் குறிப்பிடுகின்றார் ஒள்ளிய செங்குரலிக் கொடி நிறைந்த தண்ணிய நீர்நிலை எனப் புறம் காட்டுகின்றது.

ஒண் **செங்குரலி** தண் கயம் கலங்கி (புறம்.283:1)

**வஞ்சி**

சங்க இலக்கியங்களில் வஞ்சி என்பது மலராகவும் சேர மன்னனின் தலைநகராகவும் திணையாகவும் கொள்ளப்பெறுகின்றது. புதலும், மங்கையும், ஊர்பதியும், மாற்றார் குடையும் வஞ்சி ஆகும்' என்று பிங்கல நிகண்டு கூறுகின்றது. இவற்றுள் வஞ்சி என்பது ஒரு புதர் என்று பொருள் கொள்ளப்பெறுகின்றது. வஞ்சியில் மரமும் உண்டு, வஞ்சிக் கொடியும் உண்டு. எதன் பூவைப் புறப்பூவாகக் கொண்டனர்? இலக்கண இலக்கியங்களில் எது என்று குறிக்கப்படாததால், இது வினாவில் இடம் பெறுகின்றது, என்கிறார் கோவை இளஞ்சேரனார். வஞ்சி என்பது ஒரு சிறு மரமெனவும், சங்கப் புலவர்கள் கூறுவதும் இம்மரத்தையே எனவும், பிங்கலம் கூறும் 'புதல்' என்பதும் ஒரு சிறு மரமாகலாம் எனவும் விளக்கம் தரப்பெறுகின்றது.

மென்பாலான் உடன் அணைஇ

**வஞ்சி** கோட்டு உறங்கும் நாரை (புறம்.384:1-2)

Beyond Boundaries Into Discovery
Tamilmanam International Research Journal of Tamil Studies
Volume 1, Issue 2, November 2024

மென்புலமான மருதவயற்கண் தன் இனத்துடனே மேய்ந்துண்டு வஞ்சி மரத்தின் கிளையின்கண் தங்கி உறங்குதலைச் செய்யும் நாரை எனப் புறநானூறு வஞ்சி மலரைப் பற்றி குறிப்பிடுகின்றது.

**தும்பை**

தும்பை என்ற சொல் மலராகவும் திணையாகவும், போரில் சூடும் மலராகவும் சங்க இலக்கியங்களில் பயன்படுத்தப்படுகின்றது. தும்பை பூ, மல்லிகை பூவை விட வெண்மையாக இருக்கும். மழைக்காலம் முடியும் தருவாயில், செழித்து வளர்ந்து பூத்திருக்கும். மருத்துவத்திற்கு பயன்படும் மூலிகைகளில் தும்பைக்கு தனி இடம் உண்டு. இத்தும்பை பூவிற்கு, பாத மலர் என்ற பெயரும் உண்டு என்பர். மலர்ந்த பூவையுடைய தும்பை மாலையை அணிந்த அழகிய வலிய மார்பினை உடையவன் என்று புறநானூறும் போர்க்களங்களில் எதிர்சென்று போரிடும் தும்பைப் பூ சூடிய பகைவரின் பெருவீரச்செயல் காட்டிப் பகைவரோடு போர்செய்தலைக் கூறும் புறத்திணை வகைகளுள் ஒன்றான தும்பைத்திணை எனப் பதிற்றுப்பத்தும் விளக்கம் தருகின்றது.

அலர் பூ **தும்பை** அம் பகட்டு மார்பின் (புறம்.96:1)

துப்பு துறைபோகிய வெப்பு உடை **தும்பை**

கறுத்த தெவ்வர் கடி முனை அலற (பதி.39:3-4)

அமர் கடந்து மலைந்த **தும்பை** பகைவர் (பதி.14:8)

**தோன்றி**

மருதோன்றி, மருத்தோன்றி, மருதாணி, அழகணம் என்றெல்லாம் தோன்றி மலரை அழைப்பதுண்டு என்பர். அதுபோல மருத்தோன்றி என்னும் சொல்லிலுள்ள மரு என்னும் முதல் மறைந்து தோன்றி என நின்று மருதாணிப் பூவை உணர்த்துகிறது எனல் பொருத்தமானது. இதனை இப்படிப் பார்க்கவேண்டும். தோன்றி என்பது பழந்தமிழ். மரு -மணம். தொலை தூரம் மணக்கும் பூ என விளக்கும் விளக்கப்பெயராக அமைந்துள்ளது மருத்தோன்றி.

வான் தோய் உயர் சிமை **தோன்றி** கோவே (புறம்.399:3)

வானளாவ உயர்ந்த உச்சியையுடைய தோன்றிமலைக்குத் தலைவனே என்று புறம் தோன்றி மலரைப் பற்றிய பதிவைப் பதிவிடுகின்றது.

**ஆரம்**

ஆரம் என்பது சந்தன மலராகும். ஒள்ளிய நெற்றியையுடைய விறலியர்க்கு பொன்னரிமாலைகள் அணிவித்தனர் என்ற செய்தியைப் பதிற்றுப்பத்து நமக்கு காட்டுகின்றது.

ஒண் நுதல் விறலியர்க்கு **ஆரம்** பூட்டி (பதி.48:2)

மேற்கண்ட சங்க இலக்கியச் சான்றுகளின் வழியாகப் பதிற்றுப்பத்தில் கரந்தை, அடும்பு, வாகை, நெய்தல், தும்பை, ஆரம் என்ற மலர்களும் புறநானூற்றில் கூவிளம், கள்ளி, பூளை, மருதம், அதிரல், கரந்தை, வள்ளி, செங்குரலி, தும்பை, வஞ்சி, தோன்றி ஆகிய மலர்களின் வருகை முறைகளைக் காணமுடிகின்றன. சங்க இலக்கிய எட்டுத் தொகை நூல்களின் புறநூல்களான பதிற்றுப்பத்து மற்றும் புறநானூற்றில் குறிஞ்சிப்பாட்டில் கபிலர் மொழிந்த 99 மலர்களில் கூவிளம், கள்ளி, பூளை, மருதம், அதிரல், கரந்தை, அடும்பு, வள்ளி, வாகை, நெய்தல், செங்குரலி, வஞ்சி, தும்பை, தோன்றி, ஆரம் ஆகிய பதினைந்து மலர்களின் வருகை முறைகளைக் காணமுடிகின்றன.

இம்மலர்களின் வருகை முறைகளைக் கொண்டு தமிழரின் வாழ்வில் மலர்கள் பெறுமிடத்தை தெள்ளிதின் தெளிவாக நம்மால் அறிமுடிகின்றது. காதல், வீரம், இயற்கை, போர், அழகு, வருணணை, அன்றாட வாழ்வியல்சார் செயல்பாடுகள் போன்ற அனைத்திலும் இம்மலர்கள் நீக்கமற நிறைந்திருக்கின்றன. இவையெல்லாம் தொல்காப்பியர் மொழிந்த ஆறறிவு உயிர்ப்பாகுபாடுகளுள் பகுத்தறிவு உயிராக இல்லாவிடினும் பகுத்தறிவு உடைய மனித வாழ்வில் அவர்களோடு ஒன்றோடு ஒன்று இணைந்து பயணம் செய்வதைச் சங்க இலக்கியம் முதல் இக்கால இலக்கியங்கள் வழியாக நாம் காணமுடிகின்றது. இந்த ஆய்வானது சங்க இலக்கிய எட்டுத்தொகையிலுள்ள புறநூல்களான பதிற்றுப்பத்து மற்றும் புறநானூற்றுப் பாக்களின் வழியாக மலர்களின் வருகைகளை எடுத்துரைக்கின்றது. இதுபோன்ற மற்ற சங்க இலக்கியங்களிலும் சங்க இலக்கியத்திற்குப் பிந்தியதான இலக்கியங்களிலும் இதன் வருகையை அறிவதும் அவற்றில் ஏற்பட்ட மாற்றங்களையும் வளர்ச்சிகளையும் அவ்வப்போது பதிவு செய்வதும் அவசியமாகும் என்பதை இக்கட்டுரை எடுத்துரைக்கின்றது.

**துணை நூற்பட்டியல்**


1. இளம்பூரணர் உரை, தொல்காப்பியப் பொருளதிகாரம் மூலமும் உரையும், 2010, சென்னை, சாரதா பதிப்பகம்
2. சங்க இலக்கியம், எட்டுத்தொகை, தொகுதி 1, 2014, சென்னை, நியூசெஞ்சுரி புத்தக நிலையம்
3. சங்க இலக்கியம், எட்டுத்தொகை, தொகுதி 2, 2014, சென்னை, நியூசெஞ்சுரி புத்தக நிலையம்
4. சங்க இலக்கியம், எட்டுத்தொகை, தொகுதி 3, 2014, சென்னை, நியூசெஞ்சுரி புத்தக நிலையம்
5. சங்க இலக்கியம், பத்துப்பாட்டு, தொகுதி - 1, 2014, சென்னை, நியூசெஞ்சுரி புத்தக நிலையம்
6. சங்க இலக்கியம், பத்துப்பாட்டு, தொகுதி - 2, 2014, சென்னை, நியூசெஞ்சுரி புத்தக நிலையம்
7. சுப்ரமணியம்.ச.வே.சு., சங்க இலக்கியம் முழுவதும், 2006, சென்னை, மணிவாசகர் பதிப்பகம்
8. சிற்பி பாலசுப்பிரமணியன், நீலபத்மநாபன், புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு, புதுதில்லி, சாகித்திய அகாதெமி
9. தமிழண்ணல், தொல்காப்பியம் பொருளதிகாரம், தொகுதி - 3, 2006, சென்னை, மணிவாசகர் பதிப்பகம்


This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.